தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 18

2009 ஜூலை 2, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்"

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

1. வினாக்கள்--விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

கட்டட வசதி

***34744—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை கூட்டுறவு பட்டயப் பயிற்சி நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்கு மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 4 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையருக்குப் பரிந்துரை செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இட ஒதுக்கீடு செய்து ஆணை பெறப்பட்டவுடன், கட்டடம் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் தற்பொழுது செயல்பட்டுவரும் திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், வேலூர் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலிருந்து பிரிக்கப்பட்டு கடந்த 2000-ல் தொடங்கப்பட்டது. தற்பொழுது திருவண்ணாமலை-திண்டிவனம் சாலையில் ஒரு தனியார் கட்டடத்தில் மாதம் 10,000 ரூபாய் வாடகையில் செயல்பட்டு வருகிறது. இட வசதி குறைவாக உள்ளது. கணினிப் பொருட்களை வைக்கவும் இடமில்லாமல் உள்ளது. மாணவர்கள் கணினிப் பயிற்சி பெற முடியாமல் சிரமப்படுகிறார்கள். எனவே, திருவண்ணாமலை மாவட்ட மக்களின் நலன் கருதி, உடனடியாகக் கட்டடம் கட்ட வேண்டுமென மீண்டும் வலியுறுத்தி, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் உள்ளன. இவற்றில், எட்டு நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவருவது உண்மைதான். திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. இந்த நிலையத்திற்கு 4 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரால், நிருவாக சிறப்பு ஆணையருக்குப் பரிந்துரை*

2009 ஜூலை 2]

செய்யப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு பெற்றவுடன் நிச்சயமாகக் கட்டடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிய இட வசதி, பயிற்சி, பயிற்றுநர்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களாலும் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் படிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் போதிய வாய்ப்புகள் இல்லாத காரணத்தினாலும், அங்கு பயிற்சி பெறும் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. ஆரம்ப காலத்திலே 150 முதல் 200 பேர் வரை சேர்ந்த இந்தப் பயிற்சி மையத்தில், கடந்த ஆண்டு 15 பேர் மட்டுமே சேர்ந்துள்ளனர். தற்பொழுது மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்க, இந்த அரசு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திலே அமைந்திருக்கிற பெருந்திட்ட வளாகத்தில், போதிய இடம் உள்ளதாகவும், 4 ஏக்கர் நிலம் கேட்டு கோப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக C.R.A. - Commissioner of Revenue Administration அலுவலகத்திற்கு அனுப்பிய கோப்பு நீண்ட நாட்களாக நிலுவையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த அரசு அதிலே கூடுதல் கவனம் செலுத்தி, நிலுவையிலுள்ள கோப்பை உடனடியாக clear செய்து, திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி அளித்து, அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென வலியுறுத்தி, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.